13

இலாஹி

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

முகம்மதியர்

திருநயக்கீர்த்தனை.

முதற்பாகம்

கல்முனைக்குடி 1-ம் நம்பர் தெரு

எ. எம். யூசுபு இயற்றியது.

செ. உதுமாலெவ்வை முயற்சியால்

அச்சிடப்பட்டது

இப்புத்தகம் வேண்டுவோர்
காத்தாங்குடி 5ம் குறிச்சி புத்தகவியாபாரி
செ. உதுமாலெவ்வை இடம்
பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

ல] 1929 [அணா 3

ரிஜிஸ்தர் காப்பிரைட்

O7·417
N29·1
49044

க. போ. அகமதுலெவ்வைப் புலவர்

இயற்றிய சாற்றுக்கவி

கலித்துறை

எங்களுக் கெல்லாஞ் சிரசாய் உதித்தவ ரெம்மிறசூல்
பங்கயப்பாத மலரடி போற்றியே பாட லுற்றான்
சங்க முழங்கும் கல்முனைக் குடிதனிலே வசிக்கும்
எங்குஞ் சிறந்த முகம்மது யூசுப்பு என்பவனே.

ஏ. எம். யூசுப்பு அவர்களியற்றிய திருநயக் கீர்த்தனம்

கலித்துறை.

அருமறைப் பொருளாய் வந்த அதிபதி நபியுல்லாமேல்
திருநயக் கவிதை யொன்றைச் செந்தமிழதனால் பாட
ஒருசொல்லதனால் மண்விண் உயிர்பலஉள்ளதெல்லாம்
துரிதமாய்ப் படைத்தளிக்கும் சோதியே துணைச்செய்வாயே

வெண்பா.

முத்தொளிவாய் முழுமதியாய் மும்மறைக்கும் மெட்சுகமாய்
இத்தரையில் வந்துதித்த எந்தலைவீர அன்புடனே
சிற்றடியேன் கூறுமிந்த திருநயக் கவியதனை
நற்றமிழை பொறுப்பீர் உகந்து

தேவாரம்.

(1) தாயிளந்த கன்றினைப்போல்த் துயரமானேன்
சர்ப்பமதன் வாயிர்ப்பட்ட தேரையானேன்
(2) தீயிலிட்ட மெழுகதுபோல் உருகலானேன்
திரைகடலில் பாய்முறிந்த கப்பலானேன்.
(3) மாயமது செய்து பொல்லாக் கசடனானேன்
வஞ்சியர்கள் சோகமதில் துஞ்சலானேன்
(4) சாயநிழல்தானுமற்ற இறசூலல்லாஎன்மேல்
சரணமலர்ச் சேவடிதந் தருள்செய்வீரே.

(1) பதம்

(ஐயையோ நானொரு என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

(1) மெய்யனே துய்யவா எவ்வுயிரையுங் கார்க்கும்
வேதமறைப்பொருளே றசூமானே—மெய்ய

அநுபல்லவி.

(2) மேதினிதனிற் கொடும் பாதகனாய்ப்பிறந்து
வேதனைப்படலானேன் இறையோனே—மெய்

சரணங்கள்.

(3) அன்னைவயிற்றிலொரு வின்னபங்கம் வாராமல்
ஆதரித்தெனை யாண்டாய் அருளோனே—மெய்

(4) உனைவிடவே கதி உலகிலெவரு முண்டோ
உவமைதனி லிடங்கா புகளோனே—மெய்

(5) தேவாதிதேவர் தொளும் செம்மல்முகம்மதாக்காய்
தீமையகற்றிவைப்பாய் திறலோனே—மெய்

(6) தண்டமிழ்கவிகூறும் தொண்டன் யூசுபின்பரி
தாபந்தீர்த்தருள் செய்வாய் மறையோனே—மெய்

(காரணமாகுந்தெய்வ என்ற வர்ணமெட்டு)

(2)
பல்லவி.

(1) வாருங்கிருபைக்கண்ணல் பாருந்திருமதினா
வாளுங்குறைசி நாதா இப்போதிலுங்கள்
தாளைத்தந்தாளும் நீதா.
மண்டலவிண்டல மெண்டிசையோர்களும்
வாழ்த்துங் குருநபியே வந்தென் துயரைத்தீரும்
பாதவிக்கும் சொந்தடிமையைக் காரும்......வாரும்

சரணங்கள்.

(2) ஆலம்படைக்குமுன்னம் கோலமயில்வடிவாய்
மேலோனிடத் திருந்தோரே மனுவோர்க்கிற
சூலாய்ப்புவி பிறந்தீரே.
ஆதுலன்மீதொரு தீதணுகாமலே ஆதரித்தே
யருள்செய் ஆமீனாஈன்ற பாலரே அலிமாசூகை
நேமியிலுண்ட சிலரே ... ... வாரும்

(3) பூரணமாமதியைத் தாரணிமீதளைத்த—காரணங்
காட்டுங்கோவே முடியரசர்
நேராய்க் கொண்டாடுந்தேவே.
பூவையராம் கதிஜாவைமணந்திடு புண்ணிய நற்பொருளே
போற்றிப் புகழ்ந்திடுவோமே. பதத்தைச் சிர
மேற்றிநிதங் கொண்டாடுவோமே ... ... வாரும்

(4) சென்னல்விளை கன்முனை நன்னகர்தன்னில் வாளும்
சின்னன்யூசுபு பாடியே பநுவல்செய்தேன்
மன்னர் நபியைத் தேடியே ... ... வாரும்

(உடுமலையின் முத்துச்சாமி என்ற வர்ணமெட்டு)

(3)
பல்லவி

(1) காணவேணுங் காணவேணும் நானே வாசம்
கமழும் முகம்மதரைத் தானே நான்
கண்டு தெரிசித்தபலன் மண்டையுள்ளமட்டும் மற
வேனே-இனிநானே. காணவேணும்

சரணங்கள்.

(2) விண்ணுலவிய திருமதியை வெகு
மேன்மையுட னளைத்தநிதியே எங்கள்
வேதரிறசூலேயுங்கள் ஆதரவேயல்லால் வேறு
இல்லையே துணை இல்லையே காணவேணு

(3) வாசஇமாமுல் முத்தகினே மங்கை
மாதாமீனு பயின்றகோனே பொல்லா
வஞ்சநிபுரீசின் துயர் நெஞ்சைவிட்டகற்றி யருள்
வாசா—மயில்வேசா. காணவேணும்

(4) நாளை மகுசற்தனில் காரும் தங்கள்
நறைமலர்ச் சேவடியைத் தாரும் இள
நங்கையாசியாமறிய மங்கையை மணம்புரியும்
நாதா—மஹாமுதா. காணவேணும்.

(5) கானகத்தில் மானின் சிறைமீட்டி அந்தக்
கசடனுக்குக் கலிமாவை யூட்டி
காட்சியுடன்யார்கள்சூழ மோட்சமுடன்வந்த திரு
கண்யா—ஆர்க்கும் புண்யா. காணவேணு

(6) பன்னகத்தினேடுரைத்த பாதா கன
பாக்கியஞ் செறிமதனு வேதா இந்தப்
பத்தன் முகம்மதுயூசுபை நித்தம் கிருபைக் கடைக்கண்
பாரும்—நகலிதீரும். காணவேணு

(செந்திக்குமாரவே லுண்டு என்ற வர்ணமெட்டு)

(4) பல்லவி.

(1) செம்மல் முகம்மதருண்டு நமக்கென்னுளும்
செம்மல் முகம்மதருண்டு

அநுபல்லவி.

(2) ஜெகதலத்துக் கதிபதி மதினுவளர் செம்மல்

சரணங்கள்.

(3) சீருலகோர் புகள் காரணராகிய ஆரணமாய
ரவரோ டுரைபேசிய செம்மல்

(4) திருமாதர்கொரு நாயகரென உறு கருமாமு
கிற்குடை நிழலிட வருமொரு செம்மல்

(5) சினத்தெளுந்திடு சுகையமு துண்டிடு கனத்த
மாமயில் வேசமே கொண்டிடு செம்மல்

(6) புகளுச்சிதகலிமா உடன் சேர்க்கவும் ஜெக
மெச்சிடுபையல் யூசுபைக் கார்க்கவும் செம்மல்

(தண்டாமரைக்குழல் மிசைதரு என்ற வர்ணமெட்டு)

(5) பல்லவி

(1) கொண்டல் குடைநிழல் நபிதரு தண்டாம
ரைப்பதந்தனைக் கண்டா லெவர்க்குங்
கெதியே அவர் திருநாமம்
விண்டால் சுவர்க்கபதியே கொண்ட

சரணங்கள்

(2) மண்டல் கமழ்செறி மக்கத் துண்டன்
நபுஜ்கிலின் சிரம் வெண்டே யரசே ஆண்டவா

அருசளவிலே செண்ட திரும்பி மீண்
டவா கொண்ட

(3) தெள்ளுமறை புறக்கானதி லுள்ளமனு
வோர்க்கெல்லாம் வள்ளலென உதித்தவாஜெகதலத்தி
லுள்ளோர்க்கருள் பதித்தவா—கொண்ட

(4) முந்த மயில்வடிவா யாதி சொந்தளகின்
வரத்தினில் பந்தமதான நாயகா மன்னரப்துல்லா
சொந்த நுதலான தாயகா—கொண்ட

(5) மெத்தவெளியேன்படுதுயர் எத்தனைஎன்றுரைப்பேன்
சித்தமிரங்கி யாளுமே கிருபைக்கண்ணால்
பத்தியுடன்பார் நாளுமே—கொண்ட

(6) ஆசையுடன் கவிபாடுமித்தாசன் யூசுவின்
முகம் நேசமுடனே பாருமே
லிவாஹுல்ஹம்து
வாசக்கொடி நிழல் சேருமே—கொண்ட

(வேலாயுதா குமாரவேலாயுதா என்ற வர்ணமெட்டு)

(6)
பல்லவி

(1) மேலானவா எவர்க்கு மேலானஎா வேண்டினே
னுந்தமை மேலானவா

அநுபல்லவி.

(2) வேளைவந்துங்கள் தாளைத்தந்தருள்—மேலான

சரணங்கள்.

(3) வீராதிவீரரே பார்புகழ் கண்யரே—மேலான
மெத்தத்துய ரத்தச்சிர மத்தத்தனி
முத்துத்துதி—மேலான

(4) பச்சமயில்வடிவே பாவலர் புகழ்முடிவே
இச்சைவைத்தே நமதடியை இன்னமும்
தாமதமேனோ-முகம்மதே—மேலான

(5) அண்டர்புகளுமக்கா ஆமீனர்தருவே மிக்கா
தொண்டன் யூசுபெனக்காய் தூதரே
தீதற-வாதற-வேயருள்—மேலான

(மாலையிலே தென்றற் சோலையிலே என்ற வர்ணமெட்டு)

(7)
பல்லவி

(1) அண்ணல் முகம்மதரென்னும் நபிவரப்
பெண்ணரசே காணனே இத்ததியில்
எண்ணமிக வானனே—அண்ணல்

சரணங்கள்

(2) ஹாசிமாங் குலத்திலொரு தாசிமெனவேயுதித்து
மாசில்லா மறைபுறக்கான் தேசமெங்குமே செலுத்தி
ஆளும் நபியாமடி மாமதினா
வாளும்ஹபீபாமடி அண்ணல்

(3) வாசமயில்வடி வேசரெனும் மகாராசர் வருவாரடி
சந்தோஷம் தருவாரடி பரவிமேல்
மங்கைகதிஸாவை மிகு இங்கிதமுடன் மணக்க
சங்கையாறரூலவரின் துங்கமாஞ் செழுமலரில்
வஞ்சியே சேர்வதெப்போ அடியேன்மனச்
சஞ்சலந் தீர்வதெப்போ அண்ணல்

(4) கானிற்படும் புள்ளி மானைப்பிணை நின்றுதானே
அளைத்தவராம் கசடருக்குத்
தீனைவிளைத்தவராம் மெத்தக்
காதலுடனே கவிதை யோதுமீருன் தீதறவே
வேதமறயானகலை மூதறிவுணர்ந்தோரிடம்
கன்னியே-சொல்வாயடி யூசுபின் துயர்
தன்னையும் விள்வாயடி அண்ணல்

(செந்திப்பழனி வீரனே என்ற வர்ணமெட்டு)

(8) பல்லவி

(1) செம்பொன்னுலக வாசரே. யுல்லாசரே
செம்பொன்னுலக வாசரே.

அநுபல்லவி

(2) அம்புவிமீதே அரசேஇப்போதே
தம்பமெண்டும்மைத் தேடுதே மனம் நாடுதே
தம்பமெண்டும்மைத் தேடுதே செம்பொன்

சரணங்கள்

(3) மாமக்கஊயா மகிளுஞ்சிங்காரா
சோமனளத்தநாதரே நன்னீதரே செம்பொன்

(4) ஒருமானுக்கிருமான் உதவிடுங்கோமான்
தருவார் நமக்கேபூவடி பொற்சேவடி
தருவார் நமக்கேபூவடி செம்பொன்

(5) பவவினை கடுமை பாருறுங்கொடுமை
இவையனைத்தும் தவிப்பீரே கவிதீர்ப்பீரே
இவையனைத்தும் தவிப்பீரே செம்பொன்

(6) வானறுசேறும் மாதவாகவிகூறும்
தீனன் யூசுபை யாண்டருள் கைகொண்டருள்
தீனன் யூசுபை யாண்டருள் செம்பொன்

(அரசிளங்குமாரர்களே என்ற வர்ணமெட்டு)

(9) பல்லவி

கண்ணே என் கனிராஜமே நபிதிரு
களலடிதனை நிதமும் தொளவே—கண்ணே

அநுபல்லவி

எண்ணரும் புகழுமதிறு நகர்க்கேக
எந்திளையேநீ யோடிவாருமடி—கண்ணே

சரணங்கள்

(1) ஆலம்படைக்கு முதல் வல்ல
ஆதிஎளினில் பச்சமயில்வடிவாய் ஆ
கோலமுடனே யிருந்து இந்த
குவலயத்தி லுள்ளோர்க்குக் குருநபியாய்—கண்

(2) நீ ணிலத்தரசர்புகழ் அப்துல்லா
நெற்றியில் முத்தொளிவா யவதரித்து நீ
தேனுமினுவயிற்றில் ஹமலாகி
செம்மல்முகம்மதரும் புவி பிறந்தார்—கண்

(3) தோகையாம் குயில்ஹலிமா அமுதுகண்டு
சுந்தரமாய்வளர்ந்து வருகையிலே தோ
ஏகனின் கிருபையினல் எங்கள் நபிக்கு
ஈரிருபது வயதாகியபின்—கண்ணே

(4) நல்லதோர் நபிபட்டமும் இறங்கியே
நானிலத்தோர்களுக்கு மருங்கலிமா நல்ல
சொல்லியே தீன் இசுலாம் வளர்ந்தேற
துங்க முகம்மதரும் தானிருந்தார்—கண்

(5) கலிமாவை நாவதனு லுரையாத
காபர்களின் மூளைகள் சிதறிடவே கலிமா
சலியாம லெவ்விடமும் போர்செய்து
சங்கை புறுக்கான் மறைதனை விதைத்தார் —கண்

(6) மானும் புலியரவும் ஒனுய்
மற்றும்பல வுயிர்க ளடிபணியும் மா
தேனர் நபியிறசூல் நறுமலர்ச்
சேவடிகாணலாம் வா தெள்ளமுதே—கண்

(7) பாவி என் துயரதனை தவிர்த்திட
பைந்தொடியே உலகி லெவருமுண்டோ பா
ஆவியு முடனு மெங்கள் நபியின்பால்
அடைக்கலம் வைத்தேனடி ஆயிளையே —கண்

(8) சிற்றறி வுடைய தொரு சின்னன்
சிறியன் யூசுபின் மனத்துயரகற்றி சி
முத்திவளி யதனிர்ச் சேர்க்கவு
முச்சக நாதரிடம் மொளிமயிலே — கண்

(என்னப்பா தருமகுண என்ற வர்ணமெட்டு)

(10) பல்லவி

(1) வாரும் நபியே இது வேளையே முகம்
பாரும் உலகில் நாஞே ரேளையே—வா

அநுபல்லவி.

(2) மூரிநகர் மதிஞ வாசரே சேவை
தாரும் திருமயிலின் வேசரே—வாரு

சரணங்கள்.

(3) மற்புய ரப்துல்லா தவப்பாலரே மிகு
அற்புதம் விளைத்தகுண சீலரே
பொற்புவனப் பதிக்கநு கூலரே நீர்
எப்போ வருவீர் மறைநூலோரே—வாரு

(4) வானோர் பணிந்திறைஞ்சும் கோமானே மதி
பானும் புகழ்பரவும் சீமானே
தாரூன் சமுகஞ்சென்ற பூமானே இந்த
தீனனுக்கு நல்குவீர் ஈமானே—வாரு

(5) இரவும்பகலு முமைத் தேடினேன் தேடி
சிறியன் யூசுபு கவிபாடினேன்
குருவா முகம்மதுவை நாடினேன் உங்கள்
மருமலர் என்சிரமேல் சூடினேன்—வாரு

(எந்தனது திருநாடு என்ற வர்ணமெட்டு)

(11) பல்லவி.

(1) செந்திருவே எம்மிறசூல சேவடியை நாடி அவர்
சேவடியை நாடி
சீக்கிரமாய்ச் சென்றிடுவோம் சேயிளையே வாடி

சரணங்கள்.

(2) மந்தரஞ் செறியு மதிஞ நகர மீதே—மதிஞ நகரமீதே
வாளும்மகுமூதைக் காணவருவாயடி மாதே—செ

(3) வடிவளகி குயில்ஹலிமா வண்ணமுலையுண்டோர்
வண்ணமுலை யுண்டோர்—வல்லவனின் திருச்சமுகம்
வாகுடனே சென்றோர்

(4) கடிகமலும் விகசிதபொற் கமலமலர்கண்டே அவர்
கமலமலர் கண்டே கலிவறுமை நீங்கிடவே
கவலுவா யென்வண்டே—செந்

(5) புதியமறைக் கரசாய்வந்த புண்ணிய சற்குருவாம்
அவர் புண்ணிய சற்குருவாம் பூரணரப்துல்லா
மகவானதொரு கருவாம்

(6) ததியினுறு மென்துயரை தீர்த்திடச்சொல் ஏளை நீ
தீர்த்திடச் சொல் ஏளை
தையலரே எனக்குதவியாரடி இவ்வேளை—செந்திரு

(7) காலமெல்லாம் பாவவினை செய்துகளித்தேனே—நான்
செய்துகளித்தேனே கண்ணியர்கள்
சோகமதினுள்ளே செழித்தேனே.

(8) வாலக்குரு நம்மிறசூல் வருவாரடிமானே அவர்
வருவாரடி மானே வறியன்
யூசுபின்வினையை முறையிடுவாய் தானே—செந்திரு

(பானுஉதையமானதோ என்ற வர்ணமெட்டு)

(12) பல்லவி.

(1) சந்திர னளித்த நாதரே வால
சந்திர னளித்த நாதரே அடியேன்மன
சிந்தைக்கிரங்கும் நீதரே—சந்திர

சரணங்கள்.

(2) இந்தத்-தாரணியோடெழு வானமுமேயமைபூரண
நீனொளிவான திலேமக மோனவேயுதி
வாரிதங் குடையிடுங்
காரணமான குருவே மனுவோர்க்கெல்லாம்
ஆரணான உருவே—சந்திர

(3) ஆதி-அந்தரமீதறு சானதிலே மிகு சுந்தரமா
யிறையோ டுரைபேசிய செந்திருவென்
ஒளிர் மந்திரமதினு
சந்தம் முழங்கும் ராசரே எகின்வரத்தில்
பந்தமதான வேசரே—சந்திர

(4) கெட்ட-பாதகனு மிபுலீசவனின் கொடும் தீதறவே
கவி யோதிடு யூசுபின் மீதினிலே உம
தாதரவே அருள்
மூதறிவை யுணர்ந்தோரே மங்கைகதிஜா
மாதை மிக மணந்தோரே—சந்திர

(பேசாதேபேத மதி என்ற வர்ணமெட்டு)

(13) பல்லவி.

(1) தாரீரோ சரணபங்கய மதைத் தாரீரோ

அநுபல்லவி.

(2) சந்ததம் பொளியு மக்கா விந்தயாறசூலே
நலம்—தாரீரோ

சரணங்கள்.

(3) காரணரப்துல்லா தவத்தறும் பாலா காதவளி
நறைகமளும் றசூலா
வாரணத்தரசர்கள் போற்றும் செங்கோலா
மங்குல் குடைகவிய திங்களையளித்தசீலா—தாரீரோ

(4) ஆதியி னொளிவினி லுதித்திடுங் கோனே
அண்டர்கள் வந்தடி பரவுஞ் சீமானே
தீதறவே கவி யோதினேன் நானே
சித்த மிகவிரங்கி இதததியரு ளீமானே—தாரீரோ

(5) சோதி வெள்ளானை மேற் பவனிசெய்வோரே
தொண்டனும் யூசுபின் தொல்வினைதீர
பூதல மீதினிற் கதிபுரி வீரே
புண்யராய் வந்துதித்த கண்ணியசிலரே பதம்—தாரீ

(தோசியே கெடுவாய் என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

(1) நாதரே வருவீர் மலர் பாதமே தருவீர்
நாதரே வருவீர் இந்த
நானிலக் தனிலே சிறந்திடு மீனுடும் பொடுமே
பகர்ந்திடு—நாதரே

சரணங்கள்.

(2) மாகமே கடந்தீர் கரு
நாகமேல் நடந்தீர் நல்ல
மாசில்லா புறுக்கான் மறைக்கரசாய் வரு
மயில் வேசர் நன்னபி—நாத

(3) கத்தனின் குருவே உம்மை
நத்தினேன் திருவே மெத்தக்
காதலுற்றடியார் மனத்துறு தீதகற்றிட
வாருமித்ததி—நாதரே

(4) முச்சகக்கனியே எனை
மெட்சியும் மணியே உங்கள்
முண்டகமலர் சேவடிதனை தொண்டன்
யூசுபுகண்டக மகிழ—நாத

(ஆனந்தமானந்தமே என்ற வர்ணமெட்டு.)

(15) பல்லவி.

(1) ஆனந்த மானந்த மானந்தமே பெரும்
ஆனந்த மானந்த மானந்தமே—ஆ

அநுபல்லவி.

(2) அண்ணல்நபி தரிசனமே இந்நிலத்தில்துதி
மனமே—ஆனந்

சரணங்கள்.

(3) வானவரேவல் செய்திடுங் கோவே
மாதவரப்துல்லா பெறுந்தேவே
தேனொழுகு மலர் சேவடி தாவே
திண்டிறல் மன்னர்புகழ் முஸ்தபாவே—ஆ

(4) மச்சவிளியுறு மாதரைக் கூடி
மானிலத்தில் பவமேசெய்தேன் கோடி
பச்சமயில்வடிவே உம்மைத் தேடி
பாவிதுயர மகற்றுவீர் நாடி—ஆன

(5) எத்திசையோர் புகழ்ந்தேற்றிடும் நாதா
வளையூசுபைக் கையாண்டிட வாதா
சத்தியமுமைப் பணிந்தேனே வேதா
சாற்றுங் கவிதனக்கே யருள் தாதா—ஆ

(16) பல்லவி.

(1) செஞ்சரணக் கெதிதாரும் எந்தன்
சிந்தைக் கவலையைத் தீரும்—செஞ்

அநுபல்லவி.

(2) அஞ்சலஞ்ச லென்றே வாரும் எங்கள்
அண்ணலே பொற்பதி சேரும்—செ

சரணங்கள்.

(3) மஞ்சுதவழ் மதினாவில் வளர்
மாமஹா மூதே இப்பூவில் என்
நெஞ்சமதை விட்டு ஆவி ஏகும்
நேரத்திற் கைகொடுத் தாள்வீர்—செஞ்

(4) அண்டர்புகழ் முஸ்தபாவே மங்கை
ஆமினா ஈன்றருள் கோவே நற்
தண்டாமரைப் பதம் தாவே எவர்க்கும்
சற்குருவாய் வந்த தேவே—செஞ்

(5) பெற்றாரிருந் துதவாது பிள்ளை
பெண்டீர்பணமும் வராது உயிர்
பற்றவமன் வரும்போது கடைக்கண்
பாருமே இப்புவிமீது—செஞ்

(6) பாலைவனந்தனில் நீரை வெகு
பண்பாயளித்திடு வோரே கன
கோலஞ்செய்யும் கலிதீர யூசுபு
கூறினேன்கவி மிகு சீரே—செஞ்

(வேதமோதி வெண்ணூல்பூண்டு என்ற வர்ணமெட்டு)

(17) பல்லவி.

பாதம்மறவேன் ஏதும் அறியா பாவிக்கருள்
தாரும்—பாதம்

அநுபல்லவி.

காதங்கமழும் நாதர்நபியே காரும்
கரைசேரும்—பாதம்

சரணங்கள்.

(1) வாவிசெறியும் மதினா நகரில்
வாழும் மகுமூதே வாவி
ஆவிஉடலுங்கள் பாலடைந்தேன்
ஆளுந் திருத்தூதே—பாதம்

(2) காலக் கொடுமையால மெலிந்தேன்
காரும் இதுவேளை காலக்
தாலம்புகழ்சேர் ஜெகதசற்குருவே
தாருந் திருத்தாளை—பாதம்

(3) தோகை ஹலிமா சூகைதவித்த
சொற்கத்ததிபதியே தோகை
தொண்டன் முகம்மதிசுப்பிவின்
துன்பந்தீர் நிதியே—பாதம்

முகையதின் ஆண்டகை அவர்கள் பேரில்

(கானகத்தில் நானலைந்து என்ற வர்ணமெட்டு)

(18) பல்லவி.

வாருந்துயர் தீருமையா வள்ளலே குதுபொலியே

அநுபல்லவி.

பாருலவும் குயிலனங்கை பாத்திமா பயின்றெடுத்தே பாரு
சீருலவும் வகுதாதில்வாழ் செம்மலே முஹியித்தீனே-வாரு

சரணங்கள்.

(1) எண்ணரிய காரணங்கள் இப்புவியிலே
விளைத்தே எண்ண
புண்ணியரே சற்குருவே பூரண முஹியத்தீனே-வாருந்

(2) வல்லியொருத்தி சலிப்பை மாற்றியொரு
சேயதனை வல்லி
தொல்லுலகிலே யளித்த சுந்தரமுஹி
யித்தீனே—வாருந்

(3) ஆவிதடுமாறும் வேளை அருங்கலிமா
வோடு நிதம் ஆவிதடு
பாவியூசுபை ஈடேற்றும் பாக்கியே
முஹியித்தீனே—வாருந்

சாகுல்ஹமீது ஆண்டகை பேரில்

(நாதாந்தஒய்யானுசா என்ற வர்ணமெட்டு)

(19) பல்லவி.

கண்டுபணிந்தோதடி ஹமீதொலியை—க

அநுபல்லவி.

வண்டுநிகரால முண்ட விளியளகி—க

சரணங்கள்.

(1) கன்னிதுயர் மீட்டி காரணங்கள் காட்டி
நன்னேர்மையாய் வாளும் நாகைப்பதிக்கரசேக்-கண்டு

(2) தஞ்சை அரசன் பிணி தனைத்தீர்த்த கண்மணி
மிஞ்சும்புகழ் விளைத்த வேதாந்த
மெய்ப்பொருளைக்—கண்டு

(3) முண்டகத்தின் பூவே முழுமதியே தேவே
தொண்டன் யூசுபுசெய்த தொல்வினையைத்
தீர்க்கக்—கண்டு

எம். யீ. மீராமுஹைதீன் அவர்களியற்றியது

சாகுல்ஹமீது ஆண்டகைபேரில்
(ஆலம் சிறந்த நபியே என்ற வர்ணமெட்டு)

(20) பல்லவி.

சாகுல்ஹமீது நாதரே சரணமருள்வீர்—சா

அநுபல்லவி.

ஈகைபுரிந் தாள்வதற்கு ஏனோ என்மேல் தடை
குறையே—சாகு

சரணங்கள்.

(1) மாகமேளுங் கடந்த மன்னறிறசூல்பேரரே
பாகனென்னைக் கடைக்கண் பாருங் குதுபொலியே-சா

(2) அச்சைநகரிலுள்ள அன்னவர் சொற்படியே
பச்சைக்காரம்பதனை பாரிலளித்தவங்கள்—சா

(3) மக்காவைச் சுற்றிவந்து மணருவருகில் நின்று
மிங்கதுவா விரப்போர் மிடிமை பிணியகற்றும்—சாகு

(4) மிக்க புகளுடைய மேலான செந்திருவே
இக்கவிபுகலுமீரான் இடர்வினை தீர்த்தருளும்—சாகு

மங்களம்.

(பஞ்சவர்ணமே உன்பாதம் என்ற வர்ணமெட்டு)

(21) கண்ணிகள்.

சோபனமே சுப சோபனமே இறைத்
தூதர் முகம்மதர்க்குச் சோபனமே—சோ
தீப விளக்கொளிவான அபூவக்கர் சித்தீக்
கவர்களுக்குஞ் சோபனமே—சோ
அண்ணல் உமறு துமானலியும் மற்றும்
ஆலசுஹா புகளானவர்க்கும்
வண்ணல்மயில் பாத்திமாவோ டசன்
ஹுசைன் மற்றும்நபிமார்க்கும் சோபனமே—சோ
ஒலிமார் அடங்கலுக்கு மரசாய்வந்துதித்த
முஹியித்தீன் ஆண்டகைக்கும்
நலிவினை தீர்த்தருள் சாகுல்ஹமீதொலி
நாயகர்க்குமென் சோபனமே—சோ
எல்லையில்லானருளால் பையல்யூசுபு
இக்கவி கூறினேன் இத்ததியில்
நல்லமூமின் முசுலீங்களுடனிதை
நாடிப்படிப்பவர்க்குஞ் சோபனமே—சோ

முற்றிற்று.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் புத்தகவியாபாரிகளுக்கும் தெரிவிப்பது யாதெனில் இந்த திருநயக் கீர்த்தனை முதற்பாகம் என்ற புத்தகத்தை கல்முனைக்குடி 1-ம் நிர் தெரு மகா-ள-ள-ஸ்ரீ வ எம். யூசுபு அவர்களிடம் சுத்தக் கிரையத்திற்கு நான் பெற்றுக்கொண்டு என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியிருப்பதால் மேற்படி புத்தகத்தை யாதாமொருவர் அச்சிடுவரேல் 1925ஸு த்து 25-வது ஆக்டு 20-வது பிரிவு 6வது உட்பிரிவின் விதிப்படி யான் கோரும் சகல நஷ்டத்திற்கும் பினல் கோர்ட்டு ஷெச்ஸன் குற்றத்திற்கும் உத்தரவாதிகளாக வேண்டுமென்பதைக் கவனிக்கக் கோருகிறேன்.

இஸ்லாம் மார்க்கப் புத்தகங்கள்.

	ரூ.	அ.	ப.		ரூ.	அ.	ப.
முகையதீன்மாலை 5-முன				சீறாவசனகாவியம்	8	0	0
ஜாத்து சேர்ந்தது	0	8	0	புத்துகிஸ்ஸா	4	0	0
நான்குபக்கிரியென்னும் சார்				இரத்தின விலாசம்	1	0	0
தர்வேஷ் கதை	0	12	0	ஐந்துபடைப்போர்	1	0	0
இரத்தினமுகம்மது காரணச்				சீறாப்புராணம்கவி	4	0	0
சரித்திரம்	0	8	0	சைபித்தூன்கிஸ்ஸா	0	6	0
நசீகத்துல்இசுலாம்ஹனபியா	0	6	0	பிஸ்மில்குறம்	0	4	0
மேற்படி ஷாப்பியா	0	8	0	ஞானமணிமாலை	0	4	0
மெஞ்ஞானரத்தின அலங்				ஷம்ஊன் நவியார்கிஸா	0	6	0
காரக் கீர்த்தனை	1	0	0	நூறுமசலா	0	6	0
இறவுசுல்கூல் படைப்போர்				குறமாது	0	6	0
வசனம்	2	0	0	பெண்புத்திமாலை	0	2	0
றசூல்மாலை மீறான்மாலை	0	6	0	தொழுகை அடவு	0	2	0
சைதத்துப்படைப்போர்	0	6	0	சலவாத்துப்பாட்டு	0	2	0
காசீம் புலவர் திருப்புகழ்	0	6	0	தீதாறுமாலை	0	4	0
பயஹாம்பரவதாரப் பலவண்				தொழுகை நாமா	0	2	0
ணச்சிந்து	0	8	0	அபூஷகமாமாலை	0	5	0
நவிஅவதார அம்மானை	0	2	0	சக்கூன்படைப்போர்	0	5	0
பாமாளிகை பதம் 2 பாகமும்	0	8	0	பலுலூன்சுகாபிமாலை	0	5	0
திருமுடியிறக்கிய ஹதீது	0	2	0	இசுவத்துநாச்சியாருடைய			
மரணவிலக்கம் மனதை				கிஸ்ஸா	0	8	0
துலக்கம்	0	4	0	பீர்ஷாம்மாள் ஹதீது	0	6	0
ராஜமணிமாலை	1	0	0	நெஞ்செளிவுமாலை	0	2	0

இன்னும் வேண்டிய புத்தகங்களுக்கு அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதி V. P. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

செ. உதுமாலெவ்வை,

புத்தக வியாபாரம்,

5ம் குறிச்சி, காத்தான்குடி.